வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.317/ஆ2/2026 நாள்: .01.2026.

பொருள்: பள்ளிக்கல்வி-வேலூர் மாவட்டம்-சார்நிலைப்பணி-01.01.2026 நிலவரப்படி-அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்கள் நிலையிலிருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை-2 ஆக பதவி உயர்வு வழங்க தகுதி வாய்ந்தவர்களின் கருத்துரு சமர்ப்பிக்க தெரிவித்தல்-சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி சிறப்பு விதிகள் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.13 பள்ளிக் கல்வித் துறை நாள்: 30.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.20, மாற்றுத்திறனாளிகள் (DAP-3.2) நலத்துறை, நாள்: 20.06.2018.
3. அரசாணை (நிலை) எண்.06, மாற்றுத்திறனாளிகள் (DAP-3.2) நலத்துறை, நாள்: 21.06.2025.
4. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.4035/சி5/இ2/2026 நாள்: .01.2026.

-----

பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/ நகரவை உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு உடற்கல்வி இயக்குநர் நிலை-2 ஆக பார்வை(1)-இல் காணும் அரசாணையின்படி பதவி உயர்வு வழங்கப்பட உள்ளதாகவும் மேலும், பார்வை(2) மற்றும் பார்வை(3)-இல் காணும் அரசாணையின்படி மாற்றுத்திறனாளி ஆசிரியர்களுக்கு பதவி உயர்வில் 4% ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பார்வை(4)-இல் காணும் பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. 01.01.2026 நிலவரப்படி 2005-ஆம் ஆண்டு வரை உடற்கல்வி ஆசிரியராகப் பணி நியமனம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. பார்வை (1)-இல் காணும் அரசாணையில் பத்தி-5 இல் (Class V) உடற்கல்வி இயக்குநர் நிலை-2க்கான கல்வித் தகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும். (அதாவது ஒரு இளங்கலை பட்டம் மற்றும் B.P.Ed கல்வித் தகுதி அல்லது B.P.Ed கல்வி தகுதிக்கு இணையான கல்வித் தகுதியை பெற்றிருக்க வேண்டும்.)

i) Bachelor's Degree with Physical Education as an elective subject with 50% marks.

Or

Scanned with OKEN Scanner

ii) Bachelor's Degree with Physical Education as an elective subject with 45% marks and participation in National or State or Inter–University competitions in sports or games or athletics recognised by Association of Indian University or Indian Olympic Association.

Or

iii) Bachelor's Degree with 45% marks and having participated in National or State or Inter–University sports or games or athletics.

Or

iv) For deputed in service candidates (i.e trained Physical Education Teachers/Coaches) graduation with 45%marks and atleast 3 years of teaching experience as per National Council for Teacher Education (Recognition /Norms & Procedure) Regulation, 2009.

Or

v) Graduate in Physical Education with 40% marks.

Or

vi) Graduate with Physical Education as an elective subject with 40% marks.

Or

vii) Graduate who participated School, Inter–Collegiate in sports/games or passed NCC 'C' certificate in accordance with the National Council for Teacher Education (Recognition Norms and Procedure) Regulations, 2007 notified on 10.12.2007.

Or

viii) Graduate in Physical Education i.e B.P.Ed. course (or its equivalent) of 3 years duration.

Or

ix) Graduate having represented State University in sports games athletics.

Or

x) Graduate who secured 1$^{st}$, 2$^{nd}$, 3$^{rd}$ position in Inter–Collegiate sports/games tournament processing NCC 'C' certificate are passed basic course in Adventure Sports.

Or

xi) Graduate with one year training programme in Sports Science, Sports Management, Sports Coaching, Yoga, Olympic Education, Sports Journalism etc. in accordance with the National Council for Teacher Education (Form of application for recognition, the time limit of submission of application, determination of norms and standards for recognition of teacher education programs and permission to start new course or training) Regulations, 2002 notified on 13.12.2002.

And

Bachelor of Physical Education B.P.Ed of at least 1 year duration (or its equivalent) from any National Council for Teacher Education recognised institution.

3. இளங்கலை பட்டத்தில் இரட்டைப் படிப்பு (Double Degree) படித்தவர்களின் பெயர்கள் சேர்க்கப்படக்கூடாது.

Scanned with OKEN Scanner

4. அலகு விட்டு அலகு மாறுதலில் வேறு துறையில் இருந்து பள்ளிக்கல்வித் துறைக்கு ஈர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் சார்பாக அவர்கள் பள்ளிக் கல்வித் துறையில் பணியில் சேர்ந்த நாள் அடிப்படையில் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.
5. பதவி உயர்வினை தற்காலிக உரிமைவிடல் செய்தவர்களில் 3 ஆண்டுகள் முடிவுற்று 01.01.2026 நிலவரப்படியான முன்னுரிமை பட்டியலில் பெயர் சேர்க்க தகுதிபெற்றவர்களா என்பதை சரிபார்த்து அதற்குண்டான ஆவணங்களுடன் பரிந்துரைக்கப்பட வேண்டும்.
6. அரசாணை (நிலை) எண்.20, மாற்றுத்திறனாளிகள் (DAP–3.2) நலத்துறை, நாள்: 20.06.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.06, மாற்றுத்திறனாளிகள் (DAP–3.2) நலத்துறை, நாள்: 21.06.2025–இன்படி, மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016–இன் படி உடற்கல்வி இயக்குநர் நிலை–2 பதவி உயர்வில் கீழ்காணும் விவரப்படி இட ஒதுக்கீடு வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

| DISABILITY | PERCENTAGE OF RESERVATION |
|---|---|
| a) Blindness and low vision | 1% |
| b) Deaf and hard of hearing | 1% |
| c) Locommotor disability including Cerebral palsy, Leprosy cured, Dwarfism, Acid attack victims and Muscular Dystrophy | 1% |
| d) Autism, Intellectual Disability, Specific Learning Disability, mental illness. | 1% |
| e) Multiple disabilities from amongst persons under clauses (a) to (d) including deaf–blindness | |

7. மேற்குறித்த மாற்றுத்திறனாளி பிரிவினர் எவரும் இருப்பின், அவர்கள் பணியில் சேர்ந்த காலத்தினை கணக்கில் கொள்ளாமல் அவர்கள் சார்பான விவரத்தினை படிவம்–2இல் பதிவு செய்து, அதற்கான அத்தாட்சி சான்றின் நகல் மற்றும் கருத்துருகளை இரண்டு பிரதிகளில் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர் சான்றொப்பமிட்டு அனுப்பி வைக்க வேண்டும்.
8. இப்பட்டியலில் இடம் பெறவுள்ள உடற்கல்வி ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் உள்ளதா என்பதையும் சுவர்ந்தாய்வு செய்த பின் கருத்துருக்களை அனுப்புதல் வேண்டும்.

Scanned with OKEN Scanner

மேற்கண்ட குறிப்புகளை பின்பற்றி தற்காலிக(Temporary) உத்தேச பெயர் பட்டியலில் பெயர்களை சேர்க்க, உடற்கல்வி ஆசிரியர்களின் விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்தும், உடன் கருத்துருக்களை 2 நகல்களிலும், பதவி உயர்வுக்கு எவரும் இல்லை எனில் இன்மை அறிக்கையும் 31.01.2026–ஆம் தேதி மதியம் 2 மணிக்குள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும், மேலும் இணைப்பில் உள்ள Ms–Excel படிவத்தில் விவரங்களை பூர்த்தி செய்து மென்நகலாக (Soft Copy) ceob2vellore@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறும் அனைத்து அரசு/நகரவை உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:**

1. பார்வை(1)–இல் காணும் அரசாணை
2. படிவம்–1 &2.
3. Ms–Excel–படிவம்–1&2.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

28/1/26

**பெறுநர்**

தலைமையாசிரியர்
அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளி
வேலூர் மாவட்டம்.

**நகல்**

மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை)
மாவட்டக் கல்வி அலுவலகம்
வேலூர்.

Scanned with OKEN Scanner